# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


## தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம்

## வட மாகாணசபைத் தேர்தல்கள் 2013 – அறிக்கை 1

**செப்டெம்பர் 2013**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி) செப்டெம்பர் 1, 2013 திகதியிலிருந்து வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் களக் கண்காணிப்பாளர்களை சேவையிலீடுபடுத்தி தனது கண்காணிப்பு பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. எவ்வாறாயினும், இதற்கு முன்னதாகவே கொழும்பிலுள்ள தே.வ.க.நி செயலகம் ஊடக அறிக்கைகள் மற்றும் களத்தில் இருந்தான ஒரு சில தன்னார்வப் பணியாளர்களூடாக தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கண்காணித்து வந்தது. செப்டெம்பர் 2ஆம் திகதியிலிருந்து 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தே.வ.க.நி கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டது. தேர்தல்கள் தொடர்பாக மக்களின் மனோபாவங்கள் பற்றி பொதுவாக அறிந்து கொள்வதற்கும் மற்றும் இந்த மாவட்டங்களில் நிலவும் தனித்துவமான சமூக பொருளாதார சந்தர்ப்ப சூழமைவுகளின் பின்னணியில் ஓர் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிப்படுத்துவதில் இருக்கக்கூடிய தடைகள் (ஏதேனும்) பற்றியும் அறிவது இந்தக் கள விஜயத்தின் நோக்கமாக இருந்தது.

இந்தக் கள விஜயத்தின் போது வெகு ஜன அமைப்புகள், சமூகப் பணியாளர்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோர்களுடன் நடாத்தப்பட்ட நேர்காணல்களை இந்த அறிக்கை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் அவை அலுவலக ஆய்வுகளினாலும் ஆதாரப்படுத்தப்பட்டன. நேர்காணப்பட்டவர்களது பாதுகாப்புக் கருதி அவர்களது பெயர்கள் வெளியிடப்படுவது தவிர்க்கப் பட்டுள்ளது. தே.வ.க.நி கள ஒருங்கிணைப்பாளர்களினால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களையும் மற்றும் கொழும்பிலுள்ள தே.வ.க.நி செயலகத்துக்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளையும் இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

**பின்னணி**

2013 செப்டெம்பர் 21 ஆம் திகதி அன்று தேர்தல்கள் நடைபெறவுள்ள ஏனைய இரண்டு மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வட மாகாணத்தில் அறிவிக்கப்பட்ட தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைவானதாக உள்ளது. வட மாகாணசபைக்கான தேர்தல் பிரச்சாரங்கள் இன்னமும் போட்டியாக நடாத்தப்படுவதில் சூடு பிடிக்காமை இதற்கு பங்களித்த பிரதான காரணியாக உள்ளதுடன், செப்டெம்பர் 4ஆம் திகதி வரை ஒரேயொரு பிரதான தேர்தல் கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் வாழ்க்கைத் தரத்தில் ஓர் முக்கியமான நீண்ட கால தாக்கங்களைத் தேர்தல்கள் கொண்டிருக்குமென தாங்கள் காணவில்லை என்பதே இப்பகுதிகளிலுள்ள சமூகக் குழுக்களினால் தெரிவிக்கப்பட்ட மிகவும் பொதுவான கருத்தாகும். தேர்தல் செயன்முறைகளில் பங்குபற்றுவது முக்கியமானது என சிலர் கருத்து தெரிவித்த வேளையில், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எழுக்காடு, முகமாலை போன்ற கிராமங்களிலுள்ள நேர்காணப்பட்ட ஏனைய சிலர், தங்களது நாளாந்த அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்வதற்கு அவர்கள் போராடுவதால் குறித்த கிராமத்தவர்கள் தங்களது நாளாந்த நடவடிக்கைகளிலேயே கூடிய கவனத்தைக் கொண்டிருப்பதினால் வாக்களிப்பதில் குறைந்த ஆர்வத்தையே கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர். இந்த உணர்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் பலரினாலும் எதிரொலிக்கப்பட்டது.

**கரிசனைக்குரிய முக்கியமான விடயங்கள்**

தேர்தல்களுக்கான உற்சாகம் காணப்பட்டபோதிலும் கூட, குறிப்பிட்ட கரிசனைகளும் மற்றும் தனிப்பட்டவர்களது அனுபவங்களும் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொன்றுக்கு வேறுபட்டதுடன் ஒரே மாவட்டத்திலும் நகரப் பகுதி மற்றும் கிராமப் பகுதிகளுக்கிடையில் வேறுபட்டு இருந்தது. இந்த மாவட்டங்கள் அனைத்திலும் திரும்பத் திரும்ப காணப்படுகின்ற பொதுவான பல விடயங்கள் இருந்தன என்பதுடன் அவை கீழே சுட்டிக்காட்டப்பட்டள்ளன.

**அ. தேர்தல் செயன்முறைகளில் இராணுவத்தின் ஈடுபாடு**

வட மாகாணத்தில் துருப்புகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ மற்றும் அரசாங்க அதிகாரிகள் தங்கள் நிலைப்பாட்டைப் பேணினாலும் மாகாணத்தின் நாளாந்த நடவடிக்கைகளில் இராணுவம் ஓர் தொடர்ச்சியான பிரசன்னமாக இருப்பதை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். விசேடமாக, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவு எண்ணிக்கையிலான இராணுவத்தினர் பிரசன்னமாக உள்ளனர்.

பொதுமக்களின் நாளாந்த நடவடிக்கைகளில் இராணுவத்தின் ஈடுபாடானது, பல்வேறுபட்ட வடிவங்களில் நடைபெறுகின்றதுடன், இவற்றுள், தேர்தல் செயன்முறைகள் மீது ஓர் நேரடித் தாக்கம் கொண்ட பல கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

1. **வட மாகாணத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வகிபாகம்**

ஓர் தொண்டர் சேவையாக அச்சுறுத்தலுக்குள்ளான கிராமங்களின் எல்லைகளைப் பாது காப்பதற்காக 1980களின் நடுப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஊர்காவல் படைச் சேவை 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி 1462/20 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக சிவில் பாதுகாப்பு திணைக்களமாக ஸ்தாபிக்கப்பட்டு மீள்கட்டமைக்கப்பட்டது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் தற்போதைய வகிபாகம் பின்வருமாறு:

- விவசாய வேலைத்திட்டங்கள்
- செங்கல் உற்பத்தி
- கோழிப் பண்ணைகள்
- தொல்பொருளியல் இடங்களை புனருத்தாரணம் பண்ணுவதில் தொல்பொருளியல் திணைக்களத்துக்கு உதவுதல்
- வீதிகள் மற்றும் நகரங்களின் அபிவிருத்தி
- ஆரம்பப் பாடசாலைகள் முன்பள்ளிப் பாடசாலைகள் என்பவற்றை நடாத்துதல்
- அரசாங்க நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் ( நீதிமன்றங்கள், வங்கிகள், வனஜீவராசிகள் பாதுகாப்பு போன்றவை)
- ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் இரும்பாலைப் பட்டறைகளை செயற்படுத்தல்
- தனியார் பாதுகாப்பு ஆளணியினருக்கு பயிற்சியளித்தல்
- பாதுகாப்பு அமைச்சினால் அளிக்கப்படும் விசேட பணிகள்

சிவில் பாதுகாப்பு சேவை நடாத்தும் பண்ணைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப் பட்டுள்ளதாகவும் மற்றும் மாவட்டத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிவில் பாதுகாப்பு சேவையால் கொடுப்பனவுகள் அளிக்கப் படுவதாகவும் கிளிநொச்சியிலுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். விவசாயிகள் மற்றும் முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆட்சேர்த்தல் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரசித்தமான ஐ.ம.சு.கூ வேட்பாளர்கள் இருவரினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருவதாக தனிப்பட்ட பலரும் குற்றஞ் சாட்டினர்.

சிவில் நிர்வாகங்களில் இராணுவ மற்றும் பகுதியளவிலான இராணுவக் கட்டமைப்புக் கொண்ட அரச செயற்பாடுகளின் அதிகரித்தளவிலான ஈடுபாடு குறித்த கரிசனைகளுக்கு மேலதிகமாக, இராணுவத்தின் ஈடுபாடுகளும் கூட கட்சி அரசியல் பரிமாணங்களைக் கொண்டுள்ளது குறித்து தீவிரமான கரிசனைகள் உள்ளதாக தே.வ.க.நி பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. வேலை வாய்ப்புகள் தகைமையடிப்படையில் இல்லாது அரசியல் ரீதியான கூட்டுறவின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன என்பதுடன் பல சந்தர்ப்பங்களில் தேவையான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்பட்டு அவர்களது கட்சி அரசியல் ஆதரவு காரணமாக குறைந்த தகுதியும் அனுபவமும் கொண்டவர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர் என்பது கிளிநொச்சி மாவட்டம் முழுவதிலுமிருந்து தொடர்ச்சியாக கேட்கப்பட்ட ஒரு முறைப்பாடாகும்.

வட மாகாணத்தின் இராணுவமயமாக்கல் பற்றி கரிசனைகளை எழுப்பும் அதேவேளை இந்த இராணுவப் பிரிவுகளுடன் வேலைகளுக்காக தனிப்பட்டவர்கள் ஏன் விண்ணப்பிக்கின்றனர் என நேர்காணப்பட்டவர்களை தே.வ.க.நி வினவிய போது இந்த நியமனங்கள் பல கவர்ச்சிகரமான சம்பளங்களுடன் வருகின்றன என்பது பொதுவாக கிடைக்கப் பெற்ற பதிலாக இருந்தது – முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதமொன்றுக்கு 18,000 ரூபாய்கள் சம்பளமாக வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. விசேடமாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தனிப்பட்ட பலர் தங்களது குடும்பங்களின் வாழ்வாதார வாய்ப்புகளைத் தக்க வைப்பதில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சூழமைவில் இத்தகைய வேலை வாய்ப்புகளை உதாசீனம் செய்வது கடினமானது.

2. **இராணுவக் கண்காணிப்பு**

அனைத்து மூன்று மாவட்டங்களிலும் உள்ள மக்களால் முகங் கொடுக்கப்படும் மற்றொரு பிரச்சினை இராணுவத்தால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருவதாகும். விருந்தினர்களின் நடமாட்டங்கள் மற்றும் உள்ளூர் ஒன்றுகூடுதல்கள் என்பன கவனமாக கண்காணிக்கப்படுகின்றன. சிவில் உடை தரித்த இராணுவத்தினர் பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் கூட கலந்து கொண்டதாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரு சமூப் பணியாளர் தெரிவித்தார்.

வைபவங்கள், கிராமக் கூட்டங்கள் போன்றவை இராணுவக் குழுக்களால் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சியிலுள்ள சமூகப் பணியாளர் ஒருவர் கூறினார். கூட்டமொன்றில் புலனாய்வு உத்தியோகத்தர்கள் பங்குபற்றாவிட்டாலும் கூட அவர்கள் கலந்து கொண்ட கூட்டம் தொடர்பாகவும் விசேடமாக வெளியாட்கள் அல்லது விருந்தினர்களுடன் அவர்கள் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் பற்றி கிராமத்தவர்கள்

பின்னர் விசாரிக்கப் படுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவர் தே.வ.க.நிக்கு தெரிவிக்கையில், கண்காணித்தல் அத்துனை நுட்பமானதாக இருந்ததெனவும், இளைஞர் குழுவொன்றினால் மேடையேற்றப் பட்ட நாடகமொன்றை ஒளிப்பதிவு செய்வதற்கு அமர்த்தப்பட்ட ஒருவரிடமிருந்து ஒளி நாடாப் பிரதியொன்றை புலனாய்வு உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டதுடன் நாடகத்தின் உள்ளடக்கங்கள் பற்றி குறித்த ஸ்தாபனத்தின் பல்வேறு உறுப்பினர்களை பின்னர் கேள்விக்குட்படுத்தியதாக அவர் கூறினார்.

இந்த அளவிலான கண்காணிப்பு வட மாகாணத்து மக்கள் மத்தியில் பீதி மற்றும் அச்சுறுத்தல் என்பவற்றுக்கான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. இராணுவம் ஐ.ம.சு.கூ வேட்பாளர்களை ஆதரிக்கின்றது எனும் குற்றச்சாட்டுகளோடு இணைந்ததாக இது அரசியல் கலந்துரையாடலுக்கான அரசியல் இடைவெளி மற்றும் இடம் என்பவற்றை முடக்கி விடுகின்றது. இதனால் வட மாகாணத்தில் வாழும் மக்கள் கண்காணிக்கப்பட்டும் மற்றும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டும் வருவதன் காரணமாக அவர்களது பார்வையில் தங்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. அதனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் வட மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் இடைவெளி பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## 3. சிவில் பாதுகாப்புக் குழுவின் வகிபாகம்

சிவில் பாதுகாப்புக் குழு (சி.பா.கு) கிராம சேவகர்கள் மட்டத்தில் ஓர் நலன்புரி ஸ்தாபனமாக செயற்படுவதற்கு ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட அமைப்பிலிருந்து உருவாகியதாகும். ஆரம்பத்தில் இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்ட போது அவை பொதுமக்களை உள்ளடக்கி இருந்தது. எவ்வாறாயினும், பின்னர் பொலிஸ் மற்றும் இராணுவம் என்பனவும் "இச்செயன் முறைகளில் பங்குபற்றுவதற்கு தன்னார்வம் காட்டின". சிவில் பாதுகாப்புக் குழு புலனாயவுத் தகவல்களைத் திரட்டும் ஒரு முறையாக பயன்படுத்தப்படுகின்றது என பலரும் குற்றஞ் சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுவொன்றின் உறுப்பினரொருவரை தே.வ.க.நி நேர்கண்ட போது, " சேவைகள் வழங்குவது என்பதன் அடிப்படையில் அங்கு வேலையெதுவும் முன்னெடுக்கப்படுவதில்லை, உண்மையில் அங்கு என்ன நடைபெறுகின்றதெனில், அவர்கள் (இராணுவம்) எங்களிடமிருந்து தகவல்களைத் திரட்டுவதற்கு வேண்டுகிறது", என்று தெரிவித்தார். சிவில் பாதுகாப்புக் குழுவில் இணைந்து கொள்வதற்கு அழைக்கப்படும் ஆட்கள் சமூகப் பணிகளில் அநேகம் ஈடுபடுபவர்களாக உள்ளனர். அதனால்

அவர்கள் மீதும் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் மீது கூடுதல் கவனமாக இருப்பது புலனாய்தல் மற்றும் தகவல் திரட்டுவது என்பவற்றுக்கு முக்கியமானதாகும். இராணுவத்தின் பார்வையில் சந்தேகத்துக்கிடமானவர்கள் யாரையேனும் அவர்கள் எப்பொழுதாவது சந்தித்தால், அவர்களது சந்திப்பின் தன்மை மற்றும் பரிமாறப்பட்ட தகவல்கள் குறித்து அவர்கள் அறிந்து கொள்வதற்காக இராணுவம் அநேகம் காத்திருப்பதாகவும், சிவில் பாதுகாப்புக் குழுவின் அவ்வுறுப்பினர் மேலும் உறுதிப்படுத்தினார்.

4. **பிரச்சாரங்களில் இராணுவ அதிகாரியின் நேரடி ஈடுபாடு**

ஐ.ம.சு.கூ வேட்பாளர் எம்.ரெமிடியஸ் அவர்களுக்காக தேர்தல் பிரச்சாரத்தில் இராணுவம் ஈடுபட்டிருந்ததாக நாவாந்துறைப் பகுதியிலுள்ள ஒரு நேரில் கண்ட சாட்சி அறிவித்தார். ஆகஸ்ட் 25 ஆம் திகதி அதிகாலை நேரத்தில் ஐ.ம.சு.கூ வேட்பாளர் எம்.ரெமிடியஸிற்காக இராணுவம் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்ததை தான் கண்டதாக ஒருவர் குற்றஞ் சாட்டினார். ஆகஸ்ட் 26ஆம் திகதி கிராமத்தவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு உபகரணங்களை விநியோகிப்பதற்கு இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு வைபவத்தில் ஐ.ம.சு.கூ வேட்பாளர் எம்.ரெமிடியஸ் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த தாகவும் மற்றும் வைபவத்தின் போது பின்னணியில் குறித்த வேட்பாளரின் பாரிய விளம்பரப் பலகைகளைக் காணக்கூடியதாகவும் இருந்தது குறித்து நாவாந்துறைக் கிராமத்திலிருந்து ஒருவர் அறிவித்தார்.

### அ. வாக்காளர்கள் பட்டியல் தொடர்பான பிரச்சினைகள்

எதிர்வரும் வட மாகாணசபை தேர்தலுக்கு 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் உபயோகிக்கப்படும். வட மாகாணம் இரண்டு "தேர்தல் மாவட்டங்களை" உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களைக் கொண்டுள்ள வேளை வன்னி தேர்தல் மாவட்டம் மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மே 2013 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட ஒரு கள அறிக்கை தேர்தல் இடாப்பின் வருடாந்த புதுப்பித்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் உரிமைகள் உறுதிசெய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான தேவையை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தகைய ஆட்களை ஓர் "துணை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதன் மூலம் 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் புதுப்பித்தல் ஆரம்பித்த போது இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் வாக்களிக்கும் உரிமையை மீள்நிலைநாட்டும்

ஓர் நோக்குடன் அரசாங்கம் ஜூன் 2013 இல் 2013ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நிறைவேற்றியது. எவ்வாறயினும், துணை வாக்காளர் பட்டியலில் உண்மையில் உள்ளடக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவானதாகும்.

| | யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் | | வன்னி தேர்தல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|
| | யாழ்ப்பாண மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | முல்லைத்தீவு மாவட்டம் | வவுனியா மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
| 2012 வாக்காளர் பட்டியல்படி பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | 426,703 | 68,589 | 52,409 | 94,367 | 72,420 |
| **துணை வாக்காளர் பட்டியலில் உள்ள** பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | 110 | 11 | 1,274 | 277 | 3,317 |
| வட மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதியான மொத்த வாக்காளர்கள் | 426,813 | 68,600 | 53,683 | 94,644 | 75,737 |

கடந்த இரண்டு வருடங்களின் போது மீளக்குடியமர்ந்த ஓர் பெரும் எண்ணிக்கையிலான ஆட்களினது வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதை இது ஏற்படுத்தியது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் சுமார் 300 குடும்பங்கள் குடியிருக்கின்ற போதிலும் 150 ஆட்கள் மாத்திரமே 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் படி வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன் வாக்காளர் துணைப் பட்டியலில் 47 ஆட்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு இயலாத பலரும், வாக்காளர் துணைப் பட்டியலில் முன்னர் இடம்பெயர்ந்த ஆட்களாக பதிவு செய்வதற்கான சென்முறையை தாங்கள் அறிந்திருக்கவில்லை எனவும் அல்லது 2011 வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்கள் காணப்பட்டு ஆனால் 2012 வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மட்டுமே மீளப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கு முடியுமென தங்களுக்கு அறியத் தரப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

### அ. வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை

இது, விசேடமா வன்னியில் பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களாலும் திரும்பத் திரும்ப கூறப்பட்ட மற்றொரு பொதுவான விடயமாகும். 26 வருடங்களில் வட மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாதலால், விருப்பு வாக்குகளை எவ்வாறு பயன்படுத்துவது என பல்வேறு தேர்தல்களில் பங்குபற்றிய உயர் கல்வியறிவு வீதம் கொண்டவர்கள் மத்தியில் கூட ஓர் குழப்பம் நிலவுகின்றது.

திருநகர், பாரதிபுரம் மற்றும் செல்வநகர் போன்ற சிறிய கிராமங்களில், தகவல் தொழில் நுட்பங்களின் உதவியுடன் அவர்களது வாக்குச் சீட்டு பரிசீலிக்கப்படலாமெனவும் மற்றும் எந்தக் கட்சிக்கு அவர்கள் வாக்களித்தார்கள் எனபதைக் கண்டுபிடிக்கலாமெனவும் ஐ.ம.சு.கூ வேட்பாளர்கள் சிலராலும் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களாலும் சமூகத்தவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதென கிளிநொச்சியிலுள்ள ஒரு வெகு ஜன அமைப்பு குறிப்பிட்டது. ஐ.ம.சு.கூ க்கு அவர்கள் வாக்களிக்காவிட்டால் அரசாங்க நன்மைகளைப் பெற்றவர்களுக்கு எதிர்காலத்தில் அத்தகைய வசதிகள் வழங்கப்படமாட்டாது எனும் அச்சுறுத்தலையே இந்த அறிக்கை உட்கிடையாக தெரிவிக்கிறது. இந்த தனிப்பட்டவர்கள் பலரும் வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வழியில்லாமலும் மற்றும் அரசாங்க நலன்புரிகளிலேயே முழுமையாகத் தங்கியிருக்கிறார்கள் என்ற உண்மையைக் கவனத்தில் கொள்ளும் போது இந்த அச்சுறுத்தல் மேலும் கூடுதலான விபரீதமானதாக உள்ளது.

விசேடமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பணிபுரிபவர்கள் (விவசாயிகள், முன்பள்ளி ஆசிரியர்கள்) அவர்கள் தபால் மூலமான வாக்களிப்புக்கு மட்டுமே தகுதியானவர்கள் எனவும் வாக்காளர் அட்டைகளை அவர்கள் பெற்றுக் கொண்டதும் அவற்றை சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்தல் வேண்டுமென சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டதாக மேலும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. எந்த

சந்தர்ப்பத்திலும் “அவர்களது வாக்கு கவனத்தற்கு எடுத்துக்கொள்ளப்படும்” எனவும் அவர்களுக்கு மேலும் அறியத்தரப்பட்டது.

### அ. அரசாங்க சொத்துக்கள் வளங்களின் துஷ்பிரயோகம்

சமுர்த்தி அதிகாரசபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நேரடி அதிகாரத்தின் கீழ் வருகின்றது. தற்போதுள்ள அரசாங்கத்தால் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உபயோகிக்கப்படுவதாக அதன் ஆரம்பத்திலிருந்தே குற்றச்சாட்டுகள் உள்ளன. வட மாகாணத்திலும் கூட அதே போன்ற மாதிரி அவதானிக்கப்பட்டதுடன், அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஐ.ம.சு.கூ வேட்பாளர்களுக்காக வீட்டுக்கு வீடு பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றதுடன் ஐ.ம.சு.கூ வேட்பாளர்களால் ஏற்பாடு செய்யப்படும் தேர்தல் கூட்டங்களுக்கு மக்களை ஆட்சேர்க்கும் கருவிகளாக பயன்படுத்துவதாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் உள்ளன. (மேலே “தேர்தல் செயன்முறைகளில் இராணுவத்தின் ஈடுபாடு” மற்றும் கீழே “தேர்தல் தொடர்பான வன்முறைகள்” என்பவற்றிலும் பார்க்க)

வட மாகாணத்தின் ஆளுனரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தீவிரமான கரிசனைகள் எழுப்பப்பட்டன. ஏனென்றால் வட மாகாணசபை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் சபையொன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு மாகாண நிர்வாகம் முழுமையாக ஆளுனரின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. ஆளுனரினாலான அரசாங்கச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றது’ வட மாகாண ஆளுனரின் உத்தியோகபூர்வ இல்லத்தை ஐ.ம.சு.கூ வேட்பாளர்களின் கூட்டங்களுக்காக பயன்படுத்துவது, ஐ.ம.சு.கூ வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் கூட்டங்களில் பேசுவது மற்றும் ஐ.ம.சு.கூ இற்கான பிரச்சாரங்களுக்கு வட மாகாண அரசாங்க சேவகர்களை உபயோகித்தல் என்பன.

தனது உத்தியோகபூர்வ பதவியை ஆளுனர் துஷ்பிரயோகம் செய்வது அவரது செயற்பாடுகளை சட்டபூர்வமாக அப்பியாசிப்பதாக இயல்புபடுத்தப்படுவதுடன் உண்மையில் அரச ஊடக ஊது குழல்களால் பரந்தளவில் விளம்பரப்படுத்தப்படுவதை தே.வ.க.நி கரிசனையுடன் கவனத்தில் கொள்கிறது.

அதிகாரத்தை வைத்திருக்கும் பொது உத்தியோகத்தர்களுக்கு (தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது தேர்ந்தெடுக்கப்படாமலோ) ஒதுக்கப்பட்ட வளங்கள் இலங்கைப் பொதுமக்களின் நம்பிக்கைப் பொறுப்பில் ஒதுக்கப்பட்டவையே அன்றி அவை அவர்களது சொந்த தனிப்பட்ட நன்மைகளுக்காகவல்ல என்பது இலங்கைச் சட்டத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட கோட்பாடு என்பதை தே.வ.க.நி கவனத்தில் பதிய வைப்பதற்கு விரும்புகிறது. அத்தகைய பொது அதிகாரத்தை ஒரு அரசியல் கட்சிக்கு அல்லது தனிப்பட்டவர்களின் ஒரு குழுவுக்காக உபயோகிப்பது இந்த பொது நம்பிக்கையின் ஒரு அப்பட்டமான மீறலாகும்.

### அ. தேர்தல் தொடர்பான வன்முறை

வட மாகாணத்தில் தீவிரமான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை மத்திய மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் என்பவற்றிலிருந்து அறிவிக்கப்படும் சம்பவங்களை விட ஒப்பீட்டளவில் குறைவானதாகும். எவ்வாறாயினும், பல முக்கியமான தன்மைகள் அல்லது போக்குகள் சுட்டிக் காட்டப்படுதல் வேண்டும்'

மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களைப் போலன்றி வட மாகாணம் ஓர் பலத்த இராணுவப் பிரசன்னத்தைக் (மேலே கலந்துரையாடப்பட்டுள்ளது) கொண்டிருப்பது முதலாவதாகும். உண்மையில் குறிப்பிட்ட வேட்பாளர்கள் துப்பாக்கிகள் போன்ற சுடுகலன்களைப் பகிரங்கமாகவும் மற்றும் ஒப்பீட்டளவில் குற்றவிலக்களிப்புடனும் வெளிக்காட்டிக் கொண்டு திரிவது போன்ற இந்த சம்பவங்கள் பலமான இராணுவப் பிரசன்னத்தின் மத்தியிலும் நிகழ்வது கடுமையான கரிசனைகளுக்கான காரணமாக அமைகிறது. இராணுவத்தால் நிலைமையுணர்ந்து தாங்கள் ஆதரவளிக்கப்படுவதால் வன்முறைகளைப் புரிபவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதற்கு இத்தகைய சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் அச்சம் மற்றும் பொறுத்துப்போதல் ஏற்படுவதற்கான காரணமாக அமைகின்றது என யாழ்ப்பாணத்தில் நேர்காணப்பட்ட பல சிவில் சமூக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். பொதுமக்கள் தரப்பிலான (அரசியல் கட்சி உறுப்பினர்களிடையேயும் கூட) இந்த அச்சம் பொலிஸில் நேரடியாக முறைப்பாடுகளை மேற்கொள்வதிலிருந்து அவர்களை அதைரியப்படுத்தியதுடன் பதிலுக்கு இது ஒரு குறைந்த மட்டத்தில் சம்பவங்கள் முறையிடப் படுவதற்கும் இட்டுச் சென்றது.

இரண்டாவதாக, செப்டெம்பர் மாதத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது வாரங்களில் தேர்தல் கண்காணிப்பாளர்களால் தீவிரத்தன்மையிலான சம்பவங்களின் அறிவிக்கப்படுதல்கள் அதிகரித்துள்ளன. தேர்தலுக்கான திகதி நெருங்கும் போதும் மற்றும் பிரச்சாரங்கள் மேலும் தீவிரமாக சூடுபிடிக்கும் போதும் அவை கூடுதல் வன்முறைகள் கொண்டவையாக மாறுவதற்கு அதிகளவிலான சாத்தியங்களுக்கான அச்சத்தையும் இது அதிகரிக்கிறது.

மூன்றாவதாக, தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை எந்தவொரு தகவல் புத்தகங்களிலும் (அதாவது' C.I.B's அல்லது E.I.B's) பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதிந்து கொள்ளவில்லை எனவும், ஆனால் பதிலுக்கு தனியானதொரு "அப்பியாசப் புத்தகத்தில்" அவற்றைப் பதிவதாக குற்றஞ்சாட்டும் பல அறிக்கைகள் உள்ளன. பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவங்களின் முறைப்பாடுகளை தகவல் புத்தகமொன்றில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும் மற்றும் முறைப்பாடு ஒரு தொடர்பு இலக்கத்தைக் கொண்டிருப்பதற்கு உரித்தானது என்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் மட்டுமன்றி வேட்பாளர்களிடையேயும் கூட ஓர் விழிப்புணர்வின்மை உள்ளது.

இதுவரை அறிவிக்கப்பட்ட கூடுதல் தீவிரத்தன்மையான சம்பவங்கள் சில கிழே விபரிக்கப்பட்டுள்ளன'

1. **ஆகஸ்ட் 14, 2013 இரவு 9.00 மணி: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், காரைநகர் தேர்தல் தொகுதி, ஒற்றைப்பனையடி, 40 வீட்டுத் திட்டம், நெடுந்தீவு.** திரு.கார்த்திகேசு நடராசா கனகரத்தினம் (த.தே.கூ வேட்பாளர்) அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, திரு.ரணசிங்க ஆரியசேன, திரு.சிமன் ஜேசுதாசன் மற்றும் திரு.ஜேசுதாசன் அந்தனி ஆகிய 3 நபர்கள் ஈ.பி.டி.பி ஆதரவாளர்கள் என குற்றஞ்சாட்டப்படும் ராஜிப், சுதன், மோகன்தாஸ், எட்வேர்ட் ராஜா, ரஞ்சன் மற்றும் இ.போ.ச சாரதி அப்பன் ஆகியோர்களால் தாக்கப்பட்டனர். தாக்குதலின் பின்னர் அதனை மேற்கொண்டவர்கள் வான் ஒன்றின் மூலமாக (பதிவு இலக்கம். ஸ்ரீ 253-5112) இடத்தை விட்டுத் தப்பியோடினர். இந்த சம்பவத்தில் காயமடைந்த திரு.ரனசிங்க ஆரியதாச நெடுந்தீவு வைத்தியசாலையில் ஆகஸ்ட் 17 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். தான் 4 நாட்கள் வைத்தியசாலையில் இருந்து ஆகஸ்ட் 21ஆம் திகதி வெளியேறியதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டதாகவும் கூறினார். எவ்வாறாயினும், ஆரியதாசா தெரிவித்ததிற்கமைய, பொலிஸ் அவரது முறைப்பாட்டை சிங்களத்தில் மட்டுமே பதிவு செய்து கொண்டதுடன் அந்த முறைப்பாட்டில் கையொப்பமிடுவதற்கு அவரைக் கேட்டுக்கொண்டது. தே.வ.க.நி நெடுந்தீவுப் பொலிஸின் உத்தியோகத்தர் சார்ஜன்ட் பஸ்நாயக்க அவர்களைத் தொடர்பு கொண்ட போது அத்தகையதொரு முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டதை மறுத்தார். நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவரும், தாக்குதல் குழுவின் உறுப்பினரெனக் குற்றஞ்சாட்டப்படும் திரு.டானியல் ரெக்ஸின் (ராஜிப்) அவர்களைத் தொடர்பு கொண்டு அவரது கருத்தைக் கேட்ட பொழுது அத்தகையதொரு சம்பவத்திலான அவரது எந்தவொரு ஈடுபடுதலையும் முற்றாக மறுத்தார். வைத்தியசாலையின் ஒரு ஊழியரான பி. ஜூலியட் அவர்களைத் தொடர்பு கொண்ட போது, மேற்குறிப்பிடப்பட்ட நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது உண்மையெனவும் ஆனால் அவரது காயங்களுக்காக அவர் வேறொரு காரணத்தை, (கூரையிலிருந்து விழுந்ததாக) தந்ததாகவும் குறிப்பிட்டார். மேலும் பொலிசாரும் வந்து குறிப்புகளை எடுத்துச் சென்றதாக அவர் உறுதிப்படுத்தினார்.

2. **ஆகஸ்ட் 20, 2013 வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ் மின்சாரநிலைய வீதி.** வட மாகாண ஐ.ம.சு.கூ வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், த.தே.கூ வேட்பாளர் திரு.எஸ்.தம்பிராசா அவர்கள் மின்சாரநிலைய வீதியில் பயணிக்கும் போது வாகனத்தை தாக்கினார். திரு.தம்பிராசா அவர்களது வாகனம் மற்றும் அவரது கடை என்பவற்றை புகைப்படம் எடுப்பதற்கும் திரு.அங்கஜன் முயற்சித்துள்ளார். அவரது தந்தையால் தலைமை தாங்கப்படும் திரு.அங்கஜனின் ஆதரவாளர்கள் த.தே.கூ வேட்பாளரது வாகனத்தை குண்டாந்தடிகளால் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. மேலும், தேர்தலில் த.தே.கூ இலிருந்து போட்டியிடுவதை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டு

திரு.அங்கஜனின் தந்தை இராமநாதனிடமிருந்து மரண அச்சுறுத்தல்களைப் பெற்றுள்ளதாக திரு.தம்பிராசாவும் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களும் குற்றஞ்சாட்டினர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதியப்பட்டுள்ள போதும், சந்தேக நபரை காவலில் எடுப்பதற்கு பொலிஸ் தவறியது. சந்தேக நபர் குற்றச்சாட்டுக்களை மறுத்தார். இராணுவப் புலனாய்வாளர் ஒருவரின் ஆதரவுடன் பொலிசாரும் இணைந்து சந்தேக நபருக்கு பாதுகாப்பு வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திரு.எஸ். தம்பிராசா சம்பவம் தொடர்பான காணொளிச் சாட்சியை வைத்துள்ளார், இதனை http://www.newjaffna.com/fullview.php?id=MjU2NjQ) எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

3.**ஆகஸ்ட் 27, 2013 அன்று வட மாகாணத்தின், யாழ்ப்பாண மாவட்டம், சாவகச்சேரி.** இலங்கை சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதான ஒழுங்கமைப்பாளரும் மற்றும் ஐ.ம.சு.கூ வேட்பாளருமான திரு.அங்கஜனின் தந்தையின் தலைமையில் திரு.அங்கஜன் இராமநாதனின் ஆதரவாளர்களுக்கும் மற்றும் ஐ.ம.சு.கூ இன் மற்றொரு வேட்பாளர் திரு. ஏ.சர்வானந்தனின் ஆதரவாளர்களுக்கும் இடையில் சாவகச்சேரியில் ஒரு மோதல் வெடித்தது. திரு. சர்வானந்தனின் ஆதரவாளர்களின் கூற்றுப்படி, திரு.அங்கஜன் இராமநாதனின் ஆதரவாளர்கள் குழுவொன்று அவர்களது அலுவலகத்துக்குள் நுழைந்து தாக்கியதில், கச்சாய் பாலாவி வடக்கைச் சேர்ந்த 29 வயதான, திரு.கனகலிங்கம் நந்தக்குமார் தாக்குதல்களிலிருந்து கடுமையான காயங்களடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிறு காயங்களை அடைந்த திரு.விஸ்வராஜா விஸ்வரூபன் மற்றும் ஏனைய சிலருடன் அனுமதிக்கப்பட்டார். சம்பவத்தின் பின்னர் பிரதேசத்தில் பெருமளவிலான இராணுவத்தினர் போடப்பட்டு இந்த சூட்டுச் சம்பவத்தில் மேலும் விசாரணைகளை நடாத்தினர்.

ஆகஸ்ட் 28, 2013 அன்று, யாழ் பொலிசார், அதற்கு முன்னைய தினத்தில் நடைபெற்ற சூட்டுச் சம்பவம் தொடர்பாக, இலங்கை சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண பிரதான ஒழுங்கமைப்பாளரும் ஐ.ம.சு.கூ வேட்பாளருமான திரு.அங்கஜனின் தந்தையான திரு.இராமநாதனைக் கைது செய்தது. ஆகஸ்ட் 29, 2013 அன்று அவர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அதன்போது அவர் 14 நாட்கள் தடுத்து வைக்கப்படுவதற்கு உத்தரவிப்பட்டதுடன், திரு.அங்கஜனின் பாதுகாவலர்கள் மீதான தாக்குதல் குறித்து புலன்விசாரணை செய்வதற்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் பொலிசாருக்கு கட்டளையிட்டது. பின்னர், நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாக முறையிட்டதால் திரு.இராமநாதன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த வழக்கு செப்டெம்பர் 13, 2013 அன்று மேலும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

**4.செப்டெம்பர் 5, 2013, இரவு 10.10: வட மாகாணம், வன்னி தேர்தல் மாவட்டம்.** தே.வ.க.நி கண்காணிப்பாளரால் அறிவிக்கப்பட்டவாறு அரசாங்க அலுவலகமொன்று (மன்னாரிலுள்ள தேசிய இளைஞர்கள் சேவை மன்றம்) அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவர்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு. அபாஸ் அப்துல் ரிப்கான் பதியுதீன் அவர்களின் ஒரு தேர்தல் கூட்டத்துக்காக ஒதுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**5.செப்டெம்பர் 7, 2013, வட மாகாணம், யாழ் மாவட்டம்.** வட மாகாணத்தில் விற்பனையாகும் "வலம்புரி" (ஒரு மாகாணத் தமிழ் புதினப்பத்திரிகை) யாழ் குடா நாட்டில் மீனவ சமூகங்களிடையே 5,000 காப்புறுதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுமென குறிப்பிட்டு விளம்பரமொன்றை பிரசுரித்தது.

இந்த விளம்பரத்தின்படி, காப்புறுதிப் பத்திரமானது திரு.அப்துல் ஹமீட் நௌமான் சிராஸ் மொகமட் என்பவரின் தலைமையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட "சிராஸ் அமைப்பினால்" வழங்கப்பட்டது. இத்தனிப்பட்ட நபர் வட மாகாணசபைத் தேர்தலில் ஐ.ம.சு.கூ வேட்பாளரொருவராவர். மேலும், இவ்விளம்பரம், குறித்த காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர், அவை அரசாங்க அனுசரனையின் கீழ் பேணப்படுமெனவும் தெரிவிக்கிறது.

**6. செப்டெம்பர் 8, 2013, மு.ப.10.00: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், பருத்தித்துறை மருதங்கேணிக் கிராமம்.** திரு.எஸ் சுகிர்தன் (த.தே.கூ வேட்பாளர்) அவர்களால் அறிவிக்கப் பட்டபடி, 15-20 வரையிலான ஒரு குழுவினர் பஸ் ஒன்றில் வந்து (பதிவு இலக்கம்.29-7102) ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.அய்யாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் (வேட்பாளர் இல.5) சார்பில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சாரத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மற்றும் தொண்டர் ஆசிரியர்களும் ஈடுபட்டிருந்ததாக அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

7. **செப்டெம்பர் 9, 2013, இரவு 8.00: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், பருத்தித்துறை தேர்தல் தொகுதி, கட்டைக்காடுமுளியன்.** திரு. யாக்கோப்பு விமலதாஸ் (NG) அறிவித்ததின்படி, நபரொருவர், வீடொன்றுக்கு வந்து, வேலியை உடைத்ததுடன், த.தே.கூ இன் சின்னத்தை கறுப்பு மையினால் வரைந்து இலக்கம் 14 ஐக் கொண்ட த.தே.கூ வேட்பாளரின் சுவரொட்டிகளை வீட்டுரிமையாளர்களின் சம்மதமின்றி பலாத்காரமாக ஒட்டிவிட்டுச் சென்றுள்ளார். வீட்டுரிமையாளர் பொலிசாருக்கு அறிவித்த போதிலும் அவர்கள் அதனை ஒரு முறைப்பாடாக அறிக்கைப்படுத்தாது குறிப்பொன்றை மட்டுமே எடுத்துச் சென்றுள்ளனர். புலனாய்வுப் பிரிவிலிருந்தானவர்கள் என சொல்லப்படும் ஆட்களால் கட்டிடத்தின் புகைப்படங்கள் எடுக்கப் பட்டன. இலக்கம் 14 இன்

கீழ் போட்டியிடும் த.தே.கூ இன் வேட்பாளர் திரு.சந்திரலிங்கம் சுகிர்தன் அவர்களை இது தொடர்பாக தொடர்பு கொண்ட போது, இத்தகைய சம்பவம் பற்றி தான் அறிந்திருக்கவில்லையெனவும் அதிலான ஈடுபாட்டையும் முற்றாக மறுத்துரைத்தார்.

8. **செப்டெம்பர் 9, 2013, பி.ப 4.35: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், காரைநகர் தேர்தல் தொகுதி, அம்பிகைநகர், 7ஆம் படி, வேலணை,** திரு.கார்த்திகேசு நடராசா கனகரத்தினம் (த.தே.கூ வேட்பாளர், யாழ் மாவட்டம்) அவர்களால் அறியத்தரப்பட்டபடி, மேற்குறிப்பிட்ட பகுதியில் த.தே.கூ ஆதரவாளர்களால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், ஈ.பி.டி.பி ஆதரவாளர்களான திரு.கந்தசாமி மயூரன் மற்றும் திரு.கார்த்திகேசு சின்னத்தம்பி ஆகியோர் அங்கு வந்து பலாத்காரமாக துண்டுப்பிரசுரங்களைப் பறித்து வீசியதுடன் அவர்கள் அவற்றை விநியோகிப்பது தொடர்ந்தால் அவர்களைக் கொலை செய்துவிடப் போவதாகவும் அச்சுறுத்தினர். பொலிசார் ஸ்தலத்திற்கு வந்ததும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர். பொலிசார் குறிப்புகளை எடுத்துச் சென்றனர். தே.வ.க.நி ஆல் தொடர்பு கொண்ட போது காரைநகர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் விக்கிரமரட்ன அத்தகையதொரு சம்பவம் பற்றி அறிந்திருப்பதை மறுத்தார்.

9. **செப்டெம்பர் 9, 2013. வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டம், தபால்மூல வாக்களிப்பு நிலையம், வலயக் கல்வி அலுவலகம், நல்லூர் மகா வித்தியாலயம், (பூங்கரை கல்வி வலயம்).** தே.வ.க.நி இற்கு ஆசிரியரொருவரால் அறியத்தரப்பட்டபடி, கிளநொச்சி, பூங்கரை மகா வித்தியாலயத்தின், வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள தபால் மூல வாக்களிப்பு மையத்தின் அத்தாட்சி உத்தியோகத்தர் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்டார்.

   அத்தாட்சி உத்தியோகத்தர் (பிரதேசக் கல்விப் பணிப்பாளர்) தபால் மூல வாக்களிப்பு செய்தவர்களின் வாக்குச் சீட்டுக்களை திறந்து சரிபார்த்ததாகவும் மற்றும் தபால் மூல வாக்களிப்புக்கு அவர்கள் தகுதியற்றவர்களென பாடசாலை ஆசிரியர்கள் பலரைத் திருப்பி அனுப்பியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், தபால் மூல வாக்களிப்புக்கு தாம் தகுதியானவர்களென உண்மையில் எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்களைப் பெற்றிருந்ததாக பாதிக்கப்பட்ட தரப்புகளால் தே.வ.க.நி இற்கு அறியத்தரப்பட்டது.

   தே.வ.க.நி இவ்விடயம் தொடர்பாக உடனடியாகவே தேர்தல்கள் உதவி ஆணையாளர் (பிரதி), கிளிநொச்சி, திரு.ஏ.எம்.எம்.கபீர் அவர்களிடம் ஒரு உத்தியோகபூர்வ முறைப்பாடொன்றை மேற்கொண்டது. வெவ்வேறுபட்ட தரப்புகளிடமிருந்தும் அத்தகையதொரு முறைப்பாட்டை தான் பெற்றதாக உறுதிப்படுத்திய அவர், இச்சம்பவம் தொடர்பாக புலன்விசாரிப்பதற்கு குறிப்பிட்ட வாக்களிப்பு மையத்திற்கு அணியொன்றை அனுப்பியதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பின்னர் திரு.கபீர் அவர்களைத் தொடர்பு கொண்டபோது குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சாட்சியங்கள் கிடைக்கவில்லையென தே.வ.க.நி இற்கு அவர் தெரிவித்தார்.

10. **செப்டெம்பர் 10, 2013, இரவு 9.45: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் தொகுதி.** மோட்டார் சைக்கிளொன்றிலான இனந் தெரியாத ஆட்கள் திருமதி. ஆனந்தி சசிதரனை (த.தே.கூ வேட்பாளர்) யாழ்ப்பாணம், ஐந்து சந்திக்கருகில் (யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில்) அவர் தேர்தல் பிரச்சாரங்களை முடித்துக் கொண்டு திரும்புகையில் தாக்கியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் கனமான ஒரு பொருளை திருமதி. ஆனந்தி இருந்த பக்கத்தின் கண்ணடி ஜன்னலை நோக்கி வீசியதால் அவரது வாகனம் சேதமடைந்தது. வாகனத்தின் ஜன்னலை நோக்கி வீசிய பொருள் குறி தவறியதால் அவர் காயங்களின்றி தப்பித்துக் கொண்டார். திருமதி. ஆனந்தி தெரிவித்தபடி, பாதுகாப்பு வாகனங்களுடன் கூடிய முக்கிய பிரமுகர்களின் மூன்று வாகனங்கள் தனது வாகனத்தை முந்திச் சென்றதாகவும், அந்த வேளையில் முக்கிய பிரமுகர்களின் வாகனத் தொடரணிக்கு இடமளிப்பதற்காக தனது வாகனத்தின் சாரதி வேகத்தைக் குறைத்த போது பின்புறத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் தாக்குதலை மேற்கொண்டது எனக் குறிப்பிட்டார். திருமதி.ஆனந்தியை தே.வ.க.நி தொடர்பு கொண்ட போது ( செப்டெம்பர் 11, 2013 அன்று மு.ப 9.30 அளவில்) அச்சம் காரணமாக, இச்சம்பவம் தொடர்பில் பொலிசாரிடம் தான் முறைப்பாடொன்றைச் மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டார்.



DR. P. Saravanamuttu
Co – Convenor



Mr.Sunil Jayasekara
Co-Convenor



Udaya Kalupathirana
Co–Convenor